


*2006-ம் ஆண்டு மே மாதம் 8-ந்தேதி
நடக்கவிருக்கும் தேர்தலின் முடிவுகளும்,
அம்முடிவுகளின் அடிப்படையில் உருவாகவுள்ள
அரசும், சட்டசபையும்,
தங்களது ஒட்டுமொத்த சமூகப் பொருளாதார வளர்ச்சிக்கும்,
நலிவிழந்தோரின் நலவாழ்வை மையப்படுத்தும் மாற்று அரசியலுக்கும்,
வித்திடுமாவென்பதே தமிழக மக்களின் கனவு!*

*பல்வேறு சலுகைகளை அள்ளித்தெளிக்கும் வகையிலே,
வெவ்வேறு கட்சிகளின் தேர்தல் அறிக்கைகளும், பிரச்சாரங்களும் அமைந்துள்ளன.
தேர்தல் அறிக்கைகள் ஒரு சடங்காக மாறிவிட்ட சூழ்நிலையிலே,
மக்களும், கட்சிகளும் கூட
இவ்வறிக்கைகளை பெரிதாகக் கணக்கில் எடுத்துக்கொள்வதில்லை!*

*அதே சமயத்தில், தமிழகத்தில் கடந்த பத்து ஆண்டுகளாக
தங்களின் துறைசார்ந்த நலிந்த மக்களின் சார்பாக
மக்கள் இயக்கங்களும், கட்சிசாரா அமைப்புகளும்*
**"மாற்று மக்கள் அறிக்கை"***களை உருவாக்கி வந்துள்ளன!*

*இப்போதைய தேர்தலையொட்டியும்
பல்வேறு மக்கள் அறிக்கைகளும், மாற்று தேர்தல் அறிக்கைகளும்,
வெளிவந்துள்ளன!*

*இத்தகு மக்கள் அறிக்கைகளின் பெரும்பான்மையானவை
துறைவாரியான கண்ணோட்டத்தில் அமைக்கப்பட்டிருந்தாலும்,
அவற்றிலே, தமிழகத்தின் மாற்று அரசியலுக்கான வித்துக்களும்*

ஒட்டுமொத்த சமூகமேம்பாடு, மற்றும் அடித்தள மாற்றங்களை முன் நிறுத்தும்,
பண்பாட்டு, பொருளாதார விடுதலைக்கான கூறுகளும்
பரவலாக உள்ளன!

**"சமூகக் கண்காணிப்பகம் - தமிழ்நாடு''**, கட்சிசாரா மக்கள் இயக்கங்கள்
முன்வைக்கும் முக்கிய கோரிக்கைகளையும், தமிழகத்தின் முக்கிய
ஆறு கட்சிகளின் அறிவிப்புகளையும், பொருத்திப்பார்க்க
எடுத்த முயற்சியின் விளைவே இத்தொகுப்பு!

(1) மாற்று அரசியலும், நிலைத்த பொருளாதார வளர்ச்சியும்
(2) நலிந்த பிரிவினரின் சமூக மேம்பாடு
(3) வாழ்வாதாரங்களுக்கான அடிப்படை மனித உரிமைகள்

என்ற மூன்று தளங்களிலே
கோரிக்கைகளும், அறிக்கைகளும் பொருத்திப்பார்க்கப்பட்டுள்ளன!

எந்த கட்சி ஆட்சிக்கு வந்தாலும், அதனுடைய கொள்கைகளையும், திட்டங்களையும் தொடர்ந்து கண்காணிப்பது மக்கள் இயக்கங்களின், மற்றும் ஒட்டுமொத்த சமூகக் குழுமங்களின் முக்கிய பணியாகும். உரிமைக் கண்ணோட்டத்தோடு அனைத்து மக்களின் ஒட்டுமொத்த வளர்ச்சியும் விடுதலையும் உள்ளடங்கிய மாற்று அரசியலை நோக்கி, கட்சிகளையும், அரசினையும் உந்துவிக்கும் முயற்சியிலே, இத்தொகுப்பு உதவுமென நம்புகிறோம்!

இத்தொகுப்பினை வெளிக்கொணர அயராது உழைத்த தமிழ்நாடு சமூகக் கண்காணிப்பகத்தின் பணியாளர்களான, **பாக்கியராசு, ஜான்குமார், காமாட்சி, பாபு, ஸ்டெல்லா, சேவியர்** அனைவருக்கும் நன்றிகள் பல!

சென்னை,
**01.05.2006**

**மனு அல்போன்ஸ்**
இயக்குநர்,
"சமூகக் கண்காணிப்பகம் - தமிழ்நாடு"

# பொருளடக்கம்

1. மாற்று அரசியலும், நிலைத்த பொருளாதார வளர்ச்சியும்
   - 1.1 பரவலாக்கப்பட்ட சனநாயகம்
   - 1.2 ஆளுகை
   - 1.3 உலகமயமாக்கலின் தாக்கம்
2. நலிந்த பிரிவினரின் சமூக மேம்பாடு
   - 2.1 பெண்கள்
   - 2.2 குழந்தைகள்
   - 2.3 தலித் மக்கள்
   - 2.4 பழங்குடியினர்
   - 2.5 மீனவர் மற்றும் கடலோரக் குழுமங்கள்
   - 2.6 தொழிலாளர்கள்
   - 2.7 உடல் ஊனமுற்றோர்
3. வாழ்வாதாரங்களுக்கான மனித உரிமைகள்
   - 3.1 கல்வி
   - 3.2 நலவாழ்வு
   - 3.3 பொதுவள ஆதாரங்கள்
     - 3.3.1 உணவு உத்திரவாதம்
     - 3.3.2 நீர் வளம்

குறிப்பு :
மக்கள் இயக்கங்களின் கோரிக்கையின் மையக்கருத்து கட்சி அறிக்கைகளில் தொடப்படாமல் இருக்கும்பொழுது, அது **கருத்து சொல்லப்படவில்லை** என குறிக்கப்படுகிறது.

| மக்கள் இயக்கங்களின் கோரிக்கைகள் | தி.மு.க. | அ.தி.மு.க. | விடுதலைச் சிறுத்தைகள் | இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) | பா.ஜ.க. | காங்கிரஸ் |
|---|---|---|---|---|---|---|
| **1. மாற்று அரசியலும், நிலைத்த பொருளாதார வளர்ச்சியும் :**<br>1.1 பரவலாக்கப்பட்ட சனநாயகம் : | | | | | | |
| மாநில அரசின் மொத்த வருவாய் செலவினத்திலிருந்து உள்ளாட்சிகளுக்கு 50% ஆக படிப்படியாக உயர்த்தப்பட வேண்டும். மத்திய அரசின் நிதி ஒதுக்கீட்டிலிருந்து மாநில அரசு 35% பெறும் பட்சத்தில், மாநில அரசு அதே அளவு நிதியை உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஒதுக்கீடு செய்ய வேண்டும்.<br>*(தமிழக ஊராட்சி அரசாங்கப் பெண் தலைவர்களின் கூட்டமைப்பு 27.2.2006)* | கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை | உள்ளாட்சிகளின் செயல்பாடுகள் மற்றும் அமலாக்கத்தை உறுதிப் படுத்த மாநில அரசு, தனது வருவாயில் 30% ஒதுக்கிட கட்சி வலியுறுத்தும். | கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை |
| 29 துறைகளுக்கான மேலாண்மை, நிதி, ஊழியர்கள் மற்றும் கட்டுப்படுத்தும் அதிகாரத்தை மூன்றடுக்கு ஊராட்சிகளுக்கு வழங்க வேண்டும்.<br>*(தமிழக ஊராட்சி அரசாங்கப் பெண் தலைவர்களின் கூட்டமைப்பு, 27.02.2006)* | தற்போதுள்ள மூன்றடுக்கு முறையின் குறைபாடுகள் சிக்கல்களைக் களைய சட்டத் திருத்தம் கொண்டுவர வலியுறுத்துவோம். | கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை | உள்ளாட்சி அமைப்புக்களின் அதிகார வரம்பு விரிவுபடுத்தப்படும். | கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை |
| கிராமப் பொது நிலங்கள் மற்றும் பொது வளங்கள் உபயோகத்தினை பொறுத்தமட்டில் முடிவெடுத்தல் மற்றும் கட்டுப்படுத்தும் அதிகாரம் கிராம ஊராட்சிகளிடம் ஒப்படைக்கப்படவேண்டும்.<br>*(தமிழக ஊராட்சி அரசாங்கப் பெண் தலைவர்களின் கூட்டமைப்பு, 27.02.2006)* | கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை |
| இந்திய அரசியல் சாசனத்தின் விதி 243Dன்படி உருவாக்கப்பட்டுள்ள மாவட்ட திட்டமிடல் குழுக்களுக்கான அதிகாரம் மற்றும் கடமைகளை விவரித்து உடனடியாக மாநில அரசு சட்ட அறிக்கை (Gazette) ஒன்றை வெளியிட வேண்டும்.<br>*(தமிழக ஊராட்சி அரசாங்கப் பெண் தலைவர்களின் கூட்டமைப்பு, 27.02.2006)* | கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை |

| மக்கள் இயக்கங்களின் கோரிக்கைகள் | தி.மு.க. | அ.தி.மு.க. | விடுதலைச் சிறுத்தைகள் | இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) | பா.ஜ.க. | காங்கிரஸ் |
|---|---|---|---|---|---|---|
| **1.2 ஆளுகை :** | | | | | | |
| தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளாட்சி மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள், மக்கள் நலனைப் பாதிக்கும் வகையில் நடந்து கொண்டால், அவர்களைப் பதவியிலிருந்து திரும்பப்பெறும் அதிகாரம் மக்களுக்குத் தரப்பட வேண்டும். *(சமூக செயல்பாட்டு இயக்கம், ஏப்ரல் 2006)* | கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை |
| அரசு நிர்வாகத்தின் நிறுவனமயமான ஊழல், பொறுப்பற்ற தன்மை, வெளிப்படையற்ற தன்மை, நிதி நிர்வாக முறைகேடுகள், உழைக்கும் மக்களை பாதிப்பதைத் தடுக்க நிதி நிர்வாக சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். *(சமகல்வி உரிமைக்கான கூட்டமைப்பு, சுனாமி சமநீதி மறுவாழ்வு பிரச்சார இயக்கம், குழந்தை உரிமைகளும், நீங்களும், ஏப்ரல் 2006)* | ஊழலற்ற வெளிப்படையான நிர்வாகத்தை அளிக்கவும், தகவல் உரிமை சட்டத்தின் கூறுகளை செயல்படுத்த நிர்வாக சீர்திருத்தக் குழுவினை அமைத்து நடவடிக்கைகள் மேற்கொள்வோம். | தூய்மையான லஞ்சலாவண்யம் இல்லாத, ஊழலற்ற நேர்மையான, வெளிப்படையான நிர்வாகத்தை வழங்குவோம். | கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை |
| தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் தேர்தல் செலவுகள் பற்றிய தகவல் மூன்று நாட்களுக்கு ஒருமுறை தாக்கல் செய்யப்பட வேண்டும். இதனை தேர்தல் கண்காணிப்பகக் குழு ஒன்று ஆய்வு செய்து நெறிமீறல்களை வெளியிட வேண்டும். *(தேர்தல் கண்காணிப்பு கூட்டமைப்பு, 8-3-06)* | கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை |
| இந்திய அரசியல் சாசனம் தரும் மதச்சார்பின்மையைத் திரித்து, மத சிறுபான்மை மக்களின் உரிமை மறுக்கும் போக்கை கேள்விக் குள்ளாக்கலோடு சிறுபான்மையினர் உரிமைகளைப் பாதுகாக்க உரிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். *(சமூக செயல்பாட்டு இயக்கம், ஏப்ரல் 2006)* | சிறுபான்மை சமுதாயத்தைச் சார்ந்த இஸ்லாமியர் மற்றும் கிறித்தவர்களுக்கு தனியாக இட ஒதுக்கீடு ஏற்படுத்த அரசியல் அமைப்புச் சட்டத் திருத்தத்தைக் கொண்டு வருவோம். | சமூக நீதியைக் கட்டிக்காத்து சிறுபான்மை மக்களின் வாழ்வுரிமை தொடர்ந்து பேணப்படும். | மதத்தின் பெயரால் சிறுபான்மை யினராக நடத்தப்படும் இசுலாமிய - கிறித்தவ மக்களின் நலன்களைப் பாதுகாக்கக் குரல் கொடுப்போம். | கருத்து சொல்லப்படவில்லை | இந்திய அரசியல் அமைப்பு சட்டத்திற்கு விரோதமான மத ரீதியான இட ஒதுக்கீடு கொண்டு வரப்பட மாட்டாது. | சிறுபான்மை மக்களுக்கு 5 சதவிகிதம் இடஒதுக்கீடு வழங்குவதற்கு ஆவன செய்தல். கிறிஸ்துவ மதம் தழுவிய தாழ்த்தப்பட்டோருக்கும் அதே உரிமை கிடைக்க மத்திய அரசை அணுகி ஆவன செய்வது. |

| மக்கள் இயக்கங்களின் கோரிக்கைகள் | தி.மு.க. | அ.தி.மு.க. |
|---|---|---|
| <u>1.3 உலகமயமாக்கலின் தாக்கம் :</u> | | |
| நமது கனிம வளமும், கடல் வளமும், வனவளமும், கொள்ளை போவதை உடனே தடுக்க வேண்டும். *(உலக வர்த்தக நிறுவனம் எதிர்ப்பு இயக்கம், 2005)* | கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை |
| உலகமயமாக்கல் மற்றும் புதிய பொருளாதாரக் கொள்கையின்படி, கல்வி, சுகாதாரம், தண்ணீர் மற்றும் சேவைத் துறைகளுக்கான நிதியாதாரங்களை படிப்படியாக குறைத்து, அவற்றை தனியார் கைகளில் ஒப்படைக்கும் மாநில அரசின் போக்கு மாற்றப்பட வேண்டும். *(ஒருங்கிணைந்த பெண்கள் இயக்கங்கள் - தமிழ்நாடு, 2006)* | கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை |
| எந்த பன்னாட்டு உடன்படிக்கையானாலும், அது நமது பாராளுமன்றம், சட்டமன்றங்களில் மற்றும் மக்களிடையே விவாதிக்கப்பட்ட பின்பே கையெழுத்திடப்பட வேண்டும், என்கிற அரசியல் நிர்ணய சட்டதிருத்தத்தை கோருவோம். *(நீதி, மாண்பு, இறையாண்மைக்கான மக்களின் நீண்ட பயணம், 2006)* | கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை |
| நமது வளங்களையும் வாழ்வாதாரங்களையும் காப்பாற்ற, எல்லா பகுதிகளிலும் எந்தவொரு தொழில்திட்டங்களை செயல்படுத்தினாலும் சம்பந்தப்பட்ட மக்களுடைய மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகளுடைய இசைவினைப் பெற்ற பின்னரே நடைமுறைப்படுத்தவேண்டும். *(மனித உரிமை மேம்பாடு, மற்றும் ஆராய்ச்சி அமைப்பு, 2003)* | கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை |



| விடுதலைச் சிறுத்தைகள் | இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) | பா.ஜ.க. | காங்கிரஸ் |
|---|---|---|---|
| தீங்கான வல்லரசியப் போக்குகளை முறியடிக்கவும் மண்ணையும், மக்களையும், மக்களுக்கான உற்பத்தி முறைகளையும் மீட்டெடுக்கவும் அவற்றை பாதுகாக்கவும் விடுதலைச் சிறுத்தைகள் பிற பாட்டாளி வர்க்க சக்திகளோடு இணைந்து போராடும். | கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை |
| கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை |
| கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை |
| கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை |

| மக்கள் இயக்கங்களின் கோரிக்கைகள் | தி.மு.க. | அ.தி.மு.க. | விடுதலைச் சிறுத்தைகள் | இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) | பா.ஜ.க. | காங்கிரஸ் |
|---|---|---|---|---|---|---|
| **<u>2. நலிந்த பிரிவினரின் சமூக மேம்பாடு :</u>**<br><u>2.1 பெண்கள் :</u> | | | | | | |
|  பாராளுமன்றத்திலும், சட்டமன்றத்திலும், அரசின் எல்லாத் துறைகளிலும் பெண்களுக்கு 50% இட ஒதுக்கீடு கிடைப்பதற்கான மசோதா உடனே சட்டமாக்கப்படவேண்டும். அனைத்து கட்சிகளும் தங்களுடைய பல்வேறு அமைப்புகளிலும், தேர்தல் தளங்களிலும் இத்தகைய ஒதுக்கீட்டினை, உடனே வழங்க வேண்டும்.<br>*(ஒருங்கிணைந்த பெண்கள் இயக்கங்கள், தமிழ்நாடு, 2006)* | கருத்து சொல்லப்படவில்லை | பெண்களுக்கு கல்வி, வேலை வாய்ப்பு, அதிகார பிரதிநிதித்துவ அமைப்புகளில் 33% இட ஒதுக்கீட்டை முழுமையாக பெற்றுத் தர அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படும். | மகளிருக்கு கல்வி, வேலை வாய்ப்புகளில் மட்டுமின்றி சட்டமன்றம் நாடாளுமன்றம் உள்ளிட்ட அனைத்துத் தளங்களிலும் 50% இட ஒதுக்கீடு வழங்கிடவும் பாடுபடுவர். | கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை | பெண்கள் நலத்திட்டங்களை செயல்படுத்த, அவர்களுக்குரிய அதிகார பங்கீட்டினையும் பொருளாதார பங்கீட்டினையும் பெற்றுத்தர வேண்டும். |
|  தமிழக அரசின் நிதி ஒதுக்கீட்டில் 50% பெண்களுக்கான செலவினமாக இருக்குமாறு ஒதுக்கப்பட்டு பெண்கள் உட்கூறு திட்டங்களாக செயல்படுத்தப்படவேண்டும்.<br>*(ஒருங்கிணைந்த பெண்கள் இயக்கங்கள், தமிழ்நாடு 2006)* | கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை | அரசின் நிதிநிலை அறிக்கை முதல், நல திட்டங்கள் வரை, அனைத்திலும் பெண்களுக்கு உரிய பங்கினை பெற்றுத்தர கட்சி போராடும். | கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை |
|  தமிழக மாநில பெண்கள் ஆணையம், போதிய நிதி ஆதாரங்களுடன், பெண்களின் உரிமைகளைக் காக்கும் அரண்களாக மாறும் வகையில் சட்டச் சீர்திருத்தங்கள் கொண்டு வருவதோடு, தமிழக மாநில பெண்கள் ஆணையத்திற்கான தலைவர் உடனடியாக நியமனம் செய்யப்படவேண்டும்.<br>*(ஒருங்கிணைந்த பெண்கள் இயக்கங்கள், தமிழ்நாடு 2006)* | கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை | மகளிர் ஆணையம் நீதிமன்ற அதிகாரம் கொண்ட அமைப்பாக மாற்றிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | மாநில மகளிர் ஆணையத்திற்கு சட்ட ரீதியான அந்தஸ்து கிடைக்கவும், காலியாக உள்ள தலைவர் பதவியை நிரப்பவும் கட்சி உறுதியாய் குரல் கொடுக்கும். | கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை |
|  மகளிர் சுய உதவிக்குழுக்கள் அரசியல் கட்சிகளுக்கு வாக்கு வங்கிகளாக மாற்றப்படுவது நிறுத்தப்படவேண்டும்.<br>*(சாரல் மகளிர் இயக்கம், 31.4..2006)* | கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை | சுய உதவிக்குழுக்களை அரசியல் சதுரங்க காய்களாய் பயன்படுத்தும் முயற்சிகளை முறியடிப்போம். | கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை |

| மக்கள் இயக்கங்களின் கோரிக்கைகள் | தி.மு.க. | அ.தி.மு.க. | விடுதலைச் சிறுத்தைகள் | இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) | பா.ஜ.க. | காங்கிரஸ் |
|---|---|---|---|---|---|---|
| <u>2.2 குழந்தைகள் :</u> | | | | | | |
| - ஐக்கிய நாடுகள் சபை அமைப்பின் குழந்தைகளின் உரிமைகள் மீதான உடன்படிக்கையின் அடிப்படையில் மாநிலத்தில் பெண் குழந்தைகள் நலத்திற்கான ஒட்டுமொத்த கொள்கை உருவாக்கப்படவேண்டும். *(ஒருங்கிணைந்த பெண்கள் இயக்கங்கள், தமிழ்நாடு 2006)* | கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை | குழந்தைகள் நலனுக்கான ஐ.நா.வின் பல்வேறு உடன்படிக்கைகளை தமிழகத்தில் கட்சி வலியுறுத்தும். | கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை |
| - மொத்த மாநில உற்பத்திக் குறியீட்டில் 2 விழுக்காட்டிற்கு குறையாமல் நிதியை குழந்தைப் பராமரிப்புச் சேவைக்கு ஒதுக்கீடு செய்ய வேண்டும். *(தமிழ்நாடு குழந்தைப் பராமரிப்புச் சேவைக்கான கூட்டமைப்பு, 2006)* | கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை |
| - பெண்கள் ஆணையம், மனித உரிமை ஆணையம் போன்று தேசிய மாநில அளவில் குழந்தைகள் ஆணையம் உருவாக்கப்பட வேண்டும். *(குழந்தை உரிமை கூட்டமைப்புகளின் கூட்டணி - தமிழ்நாடு & பாண்டிச்சேரி, 2006)* | கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை |
| - அனைத்து 3 - 5 வயது உள்ள இளங்குழந்தைகளுக்கும் மழலையர் பள்ளிச் சேர்க்கை மற்றும் இலவச கட்டாய, தரமான மற்றும் சமமான மழலையர் கல்வி வழங்க வேண்டும். *(தமிழ்நாடு குழந்தைப் பராமரிப்பு சேவைக்கான கூட்டமைப்பு, 2006)* | கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை | மாநிலம் முழுவதும் மழலையர் ஆரம்ப பள்ளிகளை அரசே அமைத்திட கட்சி பாடுபடும். | கருத்து சொல்லப்படவில்லை | எல்லா சிறுவர்களுக்கும் கல்வி கிடைக்க ஏற்பாடு செய்வது. |
| - குழந்தைத் தொழில் முறை ஒழிப்புச் சட்டம் முறையாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். *(குழந்தை உரிமை கூட்டமைப்புகளின் கூட்டணி - தமிழ்நாடு & பாண்டிச்சேரி, 2006)* | கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை | குழந்தை உழைப்பைத் தடுத்து நிறுத்தி அனைத்து குழந்தை களுக்கும் இலவச கல்வி கிடைக்க கட்சி போராடும். | கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை |

| மக்கள் இயக்கங்களின் கோரிக்கைகள் | தி.மு.க. | அ.தி.மு.க. | விடுதலைச் சிறுத்தைகள் | இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) | பா.ஜ.க. | காங்கிரஸ் |
|---|---|---|---|---|---|---|
| 2.3 தலித் மக்கள் : | | | | | | |
| தலித்துக்களின் தனித்துவ அரசியல் உரிமையைப் பிரதிநிதித்துவப்படுத்தும் இரட்டை வாக்குரிமையும், அதனை நடைமுறையாக்கும் தனித்தொகுதி முறையும் சட்டத்திருத்த ரீதியாக கொண்டு வரப்படவேண்டும்.<br>*(தலித் மனித உரிமைக்கான தேசிய பிரச்சாரம், மார்ச் 2006)* | கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை | புரட்சியாளர் அம்பேத்கர் விரும்பிய இரட்டை வாக்குரிமையுடன் கூடிய தனி வாக்காளர் தொகுதி முறையை வென்றெடுக்க விடுதலைச் சிறுத்தைகள் தொடர்ந்து பாடுபடும். | கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை |
| தலித்துக்களுக்கான சிறப்புக்கூறு திட்ட ஒதுக்கீடும், அமலாக்கமும் முறையாக, முழுமையாக செய்யப்பட ஆவன செய்ய வேண்டும்.<br>*(தலித் மக்கள் பிரகடனம், 25.4,.2006)* | சிறப்புக்கூறு திட்டத்தினை சிறப்புறச் செயல்படுத்தி முழுப்பலன்கள் அச்சமுதாய மக்களுக்கு உரிய காலத்தில் சேருவதற்குரிய முனைப்பான நடவடிக்கைகளை மேற்கொள்வோம். | கருத்து சொல்லப்படவில்லை | சிறப்புக் கூறுகள் திட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த விடுதலைச் சிறுத்தைகள் பாடுபடும். சிறப்புக்கூறுகள் திட்டத்தை அடிப்படையாகக் கொண்ட தனி நிதிநிலையறிக்கையை தாக்கல் செய்வதற்கான முயற்சிகளை மேற்கொள்வோம். | கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை |
| தமிழகத்திலுள்ள தரிசு நிலங்கள், கோயில்-மடங்களுக்குச் சொந்தமான நிலங்கள், பஞ்சமி நிலங்களை மீட்டு, மேம்படுத்தி தலித் விவசாயிகள் குடும்பங்களுக்கு தலா 5 ஏக்கர் வீதம் குடும்பத் தலைவியின் பெயரிலும் பதிவு செய்ய வேண்டும்.<br>*(தலித் விடுதலைக்கான மனித உரிமை கூட்டமைப்பு 6.03..2006)* | கருத்து சொல்லப்படவில்லை | நிலமற்ற ஆதிதிராவிட பெண்களுக்கு நிலம் வாங்க மான்யத்துடன் கூடிய கடன் உதவி வழங்கப்படும். | புதிய நிலப்பகிர்வு சட்டத்தைக் கொண்டு வரவும். அரசு, கோவில், மடம், ஆகியவற்றின் கட்டுப் பாட்டிலுள்ள தரிசு நிலங்களை நிலமற்ற விவசாயிகளான தாழ்த்தப் பட்ட மக்களுக்கு தலா 5 ஏக்கர் வீதம் பகிர்ந்தளிக்கவும் முயற்சிகள் மேற் கொள்வோம். | பஞ்சமர் நிலங்களை மீட்டு தலித் மக்களுக்கு வங்க கட்சி பாடுபடும். | கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை |

| மக்கள் இயக்கங்களின் கோரிக்கைகள் | தி.மு.க. | அ.தி.மு.க. |
|---|---|---|
| தனியார்த்துறை நிறுவனங்களில் விகிதாச்சார ரீதியில் பணி இடங்கள், கல்வி வாய்ப்புகள் தரப்பட வேண்டும். *(தலித் இயக்கங்களின் கூட்டு நடவடிக்கைக் குழு 25.04.2006)* | தனியார் துறைகளிலும், மேலும் இதுவரை நடைமுறைப்படுத்தப்படாத ஏனைய அரசு துறைகளிலும், நிறுவனங்களிலும் இடஒதுக்கீடு விரிவுபடுத்தப்பட வேண்டுமென்று வலியுறுத்துவோம். | கருத்து சொல்லப்படவில்லை |
| தலித் மற்றும் பழங்குடியினர் வன்கொடுமைகள் தடுப்புச் சட்டப்படி (1989) வழக்குகள், தொடரப்படவும், உரிய தண்டனை வழங்கப்படவும், மாவட்டந்தோறும் சிறப்பு நீதிமன்றங்களும், தேசிய அளவில் தலித் மனித உரிமை ஆணையமும் நிறுவ வேண்டும். *(தலித் அரசியலுக்கான கூட்டமைப்பு 6.03.2006)* | கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை |
| மனித மலத்தை மனிதன் சுமக்கும் இழிநிலையை முற்றாக ஒழித்திடவும் இப்பணிகளில் சிக்கி உழலும் துப்புரவு தொழிலாளர்களுக்கு மாற்று வேலை வாய்ப்புக்களைப் பெற உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும், *!தலித் அரசியலுக்கான கூட்டமைப்பு 6.03.2006)* | மனிதக் கழிவை மனிதனே வையால் அள்ளும் கொடுமையை நிறுத்தி, அந்தப்பணியை ஆற்றி வருபவர்களுக்கு தகுதியான வேறு பணி வழங்கப்படும். | கருத்து சொல்லப்படவில்லை |
| பாப்பாபட்டி, கீரிப்பட்டி, நாட்டார்மங்கலம், கொட்டகச்சியேந்தல் ஆகிய ஊராட்சிகளுக்கு மீண்டும் தேர்தல் நடத்தப்படுவதை மாநில தேர்தல் ஆணையம் உறுதி செய்ய வேண்டும். *(தமிழக ஊராட்சி அரசாங்க பெண் தலைவர்களின் கூட்டமைப்பு, 27.02.2006)* | கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை |



| விடுதலைச் சிறுத்தைகள் | இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) | பா.ஜ.க. | காங்கிரஸ் |
|---|---|---|---|
| தனியார் துறைகளிலும், தொழிற்கல்வி கல்லூரிகள், சுயநிதிக் கல்லூரிகளிலும் இட ஒதுக்கீடு பெற பாடுபடுவோம். | கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை |
| வன்கொடுமைகள் தடுப்புச் சட்டம் (1989) உள்ளிட்ட பாதுகாப்புச் சட்டங்களின் பயன்பாடுகளை மீளாய்வு செய்து, அவற்றைத் தீவிரமாக நடைமுறைப் படுத்துவதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும். | அரசின் சட்ட ரீதியான தலையீடுகள் உத்தரவாதப்படுத்தப்படவும் பிரச்சனைகள் வெளிப்படும் தருணத்திலேயே தலையிடும் - மக்கள் பிரதிநிதிகள் உட்பட ஆர்வமுடையவர்களை உள்ளடக்கிய குழுக்களை அமைத்து கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள வலியுறுத்தும். | கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை |
| மனித மலத்தை மனிதனே சுமக்கும் இழிநிலையை முற்றாக ஒழித்திடவும் அத்தகைய பணிகளில் சிக்கி உழலும் துப்புரவு தொழிலாளர்களுக்கு மாற்று வேலைவாய்ப்புகளைப் பெறவும் உரிய நடவடிக்கைகளை விடுதலை சிறுத்தைகள் மேற்கொள்ளும். | கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை |
| பாப்பாப்பட்டி, கீரிப்பட்டி, நாட்டார் மங்கலம் மற்றும் கொட்டகச்சியேந்தல் ஆகிய தனித்தொகுதிகளில் முறைப்படி தேர்தல்களை நடத்த சட்டம் மற்றும் அரசியல் அடிப்படையில் விடுதலை சிறுத்தைகள் உரிய நடவடிக்கை எடுக்கும். | கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை |

| மக்கள் இயக்கங்களின் கோரிக்கைகள் | தி.மு.க. | அ.தி.மு.க. | விடுதலைச் சிறுத்தைகள் | இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) | பா.ஜ.க. | காங்கிரஸ் |
|---|---|---|---|---|---|---|
| 2.4 பழங்குடியினர் : | | | | | | |
| பழங்குடி மக்களின் சுய நிர்ணயம், நிர்வாகம் மற்றும் நில பாதுகாப்பை நடைமுறைப்படுத்த இந்திய அரசியல் நிர்ணய சாசனம் 244 (1), (2)ன்படி, பழங்குடியினர் பகுதிகளை 5வது அட்டவணைக்குள் இருக்க வேண்டும்.<br>*(தமிழக பழங்குடியினர் கூட்டமைப்பு, 2006)* | கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை |
| பழங்குடியினர் துணைத் திட்டத்தின் மூலம் பழங்குடி மக்கள் பயன்பெறும் வகையில், பழங்குடி பகுதிகள், கிராமங்கள் மறுவரை செய்யப்படவேண்டும்.<br>*(ஆதிவாசி தோழமைக் கழகம் 6.03.2006)* | கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை | பழங்குடியினர் துணைத் திட்டத்தை அடிப்படையாகக் கொண்ட தனிநிதி நிலையறிக்கை தாக்கல் செய்ய முயற்சிகளை மேற்கொள்வோம். | கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை |
| காடுகளையும், வன உயிரினங்களையும் பல்லுயிர் பெருக்க இயற்கைச் சூழலையும் பாதுகாக்கும் பொறுப்பை பழங்குடியினர் பாரம்பரிய மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சி தலைமை அமைப்புகளிடம் ஒப்படைக்க வேண்டும்.<br>*(தமிழக பழங்குடியினர் கூட்டமைப்பு, 2006)* | கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை |
| பழங்குடி மக்களின் நிலங்களை இதர மக்கள் வாங்குவதும் விற்பதும் தமிழகத்தில் சட்ட ரீதியாகத் தடைசெய்யப்படவேண்டும்.<br>*(தமிழக பழங்குடியினர் கூட்டமைப்பு, 2006)* | கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை | நிலமற்ற பழங்குடியின மக்களுக்கு புதிய நிலப்பகிர்வு சட்டத்தைக் கொண்டுவர பாடுபடுவோம். | கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை |
| பழங்குடி மக்களின் கல்வி மற்றும் பணியிட வாய்ப்புக்களைப் பெற்றுத்தரக்கூடிய இனச் சான்றிதழ் தடையின்றி தாமதமின்றி தரப்பட வேண்டும்.<br>*(கோடை மலை, அம்பேத்கர் மக்கள் இயக்கம், ஏப்ரல், 2006)* | கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை | பழங்குடியின மக்கள் சாதிச்சான்றிதழ் பெறுவதிலுள்ள சிக்கலான அரசு நடைமுறைகளை சரிசெய்து அவர்களுக்கு உரித்தான வாழ்வுரிமைகளைப் பெற்றுத்தர பாடுபடுவோம். | கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை |

| மக்கள் இயக்கங்களின் கோரிக்கைகள் | தி.மு.க. | அ.தி.மு.க. | விடுதலைச் சிறுத்தைகள் | இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) | பா.ஜ.க. | காங்கிரஸ் |
|---|---|---|---|---|---|---|
| <u>2.5 மீனவர் மற்றும் கடலோரக் குழுமங்கள் :</u> | | | | | | |
| மீனவர்களை தாழ்த்தப்பட்ட பழங்குடிகள் பட்டியலில் சேர்த்து பழங்குடியினருக்கான உரிமைகளை வழங்க வேண்டும். *(வங்கக் கடல் மீன் தொழிலாளர் சங்கம், ஏப்ரல் 2006)* | கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை | மீனவர்கள் கடல் வாழ்மக்கள் (Sea Tribes) என்று வகைப்படுத்தப்பட்டு எஸ்.டி. மக்களுக்கான அனைத்து சலுகைகளும் மீனவர்களுக்கு வழங்கப்படும். | கருத்து சொல்லப்படவில்லை |
| கடலோர முறைமைப்படுத்தல் சட்டத்தை குறிப்பாக குடியிருப்புக் கொள்கைகளில் அரசு தீவிரமாக பின்பற்ற வேண்டும். *(கடலோர செயல்பாட்டு கூட்டமைப்பு சென்னை, 7.03.2006)* | கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை |
| கடற்கரை சுற்றுச்சூழலை பாதுகாக்கும் மணல் மேடுகள் மற்றும் சதுப்பு நிலக்காடுகளை பாதுகாக்கவும் மறுவுருவாக்கம் செய்யவும் முயற்சி மேற்கொள்ளப்படவேண்டும். *(கடலோர செயல்பாட்டு கூட்டமைப்பு 06.03.2006)* | கருத்து சொல்லப்படவில்லை | தமிழகக் கடலோரப் பகுதிகளில் கடலோரத் தொடர் தடுப்புத் தோட்டங்கள் மற்றும் சதுப்பு நிலக்காடுகளில் மறு சீரமைப்புப் பணிகள் செயல்படுத்தப்படும். | கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை |

| மக்கள் இயக்கங்களின் கோரிக்கைகள் | தி.மு.க. | அ.தி.மு.க. | விடுதலைச் சிறுத்தைகள் | இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) | பா.ஜ.க. | காங்கிரஸ் |
|---|---|---|---|---|---|---|
|  மீன் தொழிலில் ஈடுபடும் அனைத்து பெண்களையும் மீன் தொழிலாளர்கள் என்று அரசு அங்கீகாரம் வழங்க வேண்டும்.<br>*(வங்கக் கடல் மீன் தொழிலாளர் சங்கம், ஏப்ரல் 2006)* | கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை |
|  சுனாமி நிதி செலவினம் குறித்து வெள்ளை அறிக்கை வெளியிட வேண்டும்.<br>*(சுனாமி சமநீதி மறுவாழ்வுப் பிரச்சார இயக்கம், 2006)* | சுனாமி நிவாரண நிதி வழங்கியதில் நடைபெற்றுள்ள முறைகேடுகள் குறித்து விசாரணை நடத்துவோம். | கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை |
|  சேது சமுத்திரக் கப்பல் கால்வாய்த் திட்டத்தை அரசு கைவிட வேண்டும்.<br>*(கடலோர செயல்பாட்டு கூட்டமைப்பு 07.03.2006)* | கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை | சேது சமுத்திர திட்டம், மீனவர்கள் பாதிக்கப்படாத வகையிலும் இராமேஸ்வரம் கடற்கரை பகுதியில் உள்ள இராமர் பாலம் பாதிக்கப்படாத வகையிலும் மேற்கொள்ளப்படும். | கருத்து சொல்லப்படவில்லை |
|  கடற்கரையோர சுற்றுச்சூழலுக்கு எதிரான தொழிற்சாலைகள், சுற்றுலாத்தலங்கள் இறால் பண்ணைகள் மற்றும் நெடுஞ்சாலைகள் போன்ற திட்டங்கள் கைவிடப்படவேண்டும்.<br>*(தமிழ்நாடு சுற்றுச்சூழல் கழகம் - 2006)* | கிழக்கு கடற்கரைச் சாலையைக் கடலூரில் தொடங்கி கன்னியாகுமரி வரை விரிவுபடுத்துவதோடு, இருவழிச் சாலைகள் நான்கு வழிச் சாலைகளாக மாற்றப்பட நடவடிக்கை எடுப்போம். | கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை | தமிழகத்தில் கிழக்கு கடற்கரை சாலைத்திட்டத்தில் கடலூருக்கப்பால் நிறைவேற்றப்படாமல் இருக்கின்ற சாலை அமைந்திட மத்திய அரசிடம் வலியுறுத்தப்படும். | இப்பொழுது இயங்கி வரும் தொழிற்சாலைகள் தொடர்ந்து செயல் படவும், அவைகளின் கழிவுகளை சுத்திகரிக்க தேவையான மானியமும், தொழில்நுட்ப வசதியும் செய்து |

| மக்கள் இயக்கங்களின் கோரிக்கைகள் | தி.மு.க. | அ.தி.மு.க. | விடுதலைச் சிறுத்தைகள் | இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) | பா.ஜ.க. | காங்கிரஸ் |
|---|---|---|---|---|---|---|
| <u>2.6 தொழிலாளர்கள் :</u><br>• வேலைக்கு உத்திரவாத திட்டம் மற்றும் குறைந்தபட்ச ஊதிய பாதுகாப்பு அனைத்து அமைப்புசாரா தொழிலாளர்களுக்கும் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.<br>*(அமைப்பு சாரா தொழிலாளர் கூட்டமைப்பு, 2006)* | கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை | தமிழக அரசு மாநில வரம்பிற்கு உட்பட்டு வேலை உத்தரவாதத் திட்டத்தை மேலும் வலுப்படுத்த கட்சி வலியுறுத்தும். | கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை |
| • பெருவாரியான தொழிலாளர்கள் பணிபுரியும் தொழில் பிரிவுகளுக்கு தனித்தனி நலவாரியங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும். வாரியத்தில் பெண்களின் பங்கு உறுதிசெய்யப்பட வேண்டும்.<br>*(அமைப்பு சாரா தொழிலாளர் கூட்டமைப்பு, 2006)* | ஏற்கனவே தனித்தனியாக கொண்டு வரப்பட்ட தொழிலாளர்களின் நலவாரியத்தை மீண்டும் கொண்டு வருவோம். | கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை | ஒவ்வொரு தொழிலுக்கும் தனித்தனி நலவாரியம் அமைக்க கட்சி பாடுபடும். | அமைப்பு சாரா தொழிலாளர்களின் நலனைப் பேணவும் அவர்களுக்கு தக்க சட்ட பாதுகாப்பு தந்திடவும் அந்தந்த தொழில்களுக்கு என தனி வாரியம் ஏற்படுத்தப்படும். | எந்த தொழிலாளர் அமைப்பிலும் இல்லாமல் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அவர்களின் குறைகளை உடனடியாக பார்வைக்கு கொண்டு வந்து தேவையான சட்ட, திட்டங்களுடன் வாரியம் துவக்கப்படும். |
| • சத்துணவு திட்டத்தில் கடந்த 23 ஆண்டுகளாக பணியாற்றி வரும் அனைத்து சத்துணவு ஊழியர்களையும், உடனடியாக அரசு ஊழியர்களாக ஆக்க வேண்டும்.<br>*(தமிழ்நாடு சத்துணவு ஊழியர் சங்கம், 26-03-2006)* | கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை | அங்கன்வாடி, சத்துணவு, உள்ளாட்சி போன்ற பணிகளை செய்கிற ஊழியர்கள் தொகுப்பூதிய முறையிலும், ஒப்பந்த கூலி முறையிலும் சுரண்டப்படுவதை மாற்றி அவர்களின் பணியை நிரந்தரப்படுத்தி அரசு ஊழியர் ஆக்க கட்சி போராடும். | கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை |

| மக்கள் இயக்கங்களின் கோரிக்கைகள் | தி.மு.க. | அ.தி.மு.க. | விடுதலைச் சிறுத்தைகள் | இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) | பா.ஜ.க. | காங்கிரஸ் |
|---|---|---|---|---|---|---|
| தமிழ்நாட்டில் கள் இறக்குவதற்கும், விற்பனை செய்வதற்கும் விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்க வேண்டும். மேலும், போதை பொருள் பட்டியலில் கள் சேர்க்கப்பட்டுள்ளதை உடனடியாக நீக்க வேண்டும்.<br>*(தமிழ்நாடு 'கள்' இயக்கம், 16-02-2006)* | கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை | கள் இறக்கும் தொழிலை பாதுகாக்கவும் வெளிநாட்டு மதுவகைகளுக்கு மாற்றாக உடல் நலத்திற்கு கேடு விளைவிக்காத கள்ளு மற்றும் பதநீர் ஆகியவற்றை அரசே விற்பனை செய்யவும் நடவடிக்கைகளை மேற்கொள்ளும். | கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை |
| புலம்பெயர்ந்து செல்லும் தொழிலாளர்கள், அவர்களின் குடும்பம் குறித்து 1990 ஆம் ஆண்டு உருவான ஐ.நா. ஒப்பந்தத்தில் இந்தியா கையெழுத்திட ஆவன செய்ய வேண்டும்.<br>1983 குடிப்பெயர்வோர் சட்டம் தொழிலாளர்களை பாதுகாப்பதாக இல்லை. என்வே இதை பரிசீலனை செய்து திருத்தம் கொண்டு வர வேண்டும்.<br>வெளிநாடு செல்வோரை பாதுகாக்க கேரள அரசு உருவாக்கியுள்ளது **(NORKA)** போல தனி ஒரு அமைச்சகத்தை உருவாக்க வேண்டும்.<br>*(புலம்பெயர்வோர் நலன் காக்கும் அமைப்பு, 2006)* | கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை |

| மக்கள் இயக்கங்களின் கோரிக்கைகள் | தி.மு.க. | அ.தி.மு.க. | விடுதலைச் சிறுத்தைகள் | இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) | பா.ஜ.க. | காங்கிரஸ் |
|---|---|---|---|---|---|---|
| <u>2.7 உடல் ஊனமுற்றோர் :</u> | | | | | | |
|  அரசு துறையில் 3 சதவீதமும் தனியார் துறையில் 5 சதவீதமும் ஊனமுற்றோருக்கு வேலை வாய்ப்பில் இட ஒதுக்கீடு அளிப்பது கட்டாயமாக்கப்படவேண்டும்.<br>*(நந்தினி வாய்ஸ் ஃபார் தி டிப்ரைவ்டு, 08.02.2006)* | வேலை வாய்ப்பில் ஊனமுற்றவர் களுக்கு ஏற்கனவே இருக்கின்ற மூன்று சதவிகித இட ஒதுக்கீட்டை மேலும் உயர்த்துவதற்கு மத்திய அரசினை வலியுறுத்துவதோடு, உறுதியாக இந்த இட ஒதுக்கீட்டினை நடைமுறைப்படுத்துவோம். | கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை | உடல் ஊனமுற்றவர்களுக்கு அரசு, அரசு சார்ந்த நிறுவனங்கள், அரசு கட்டமைப் பில் உள்ள தனியார் நிறுவனங்கள் எல்லா வற்றிலும் தங்களுடைய மொத்த ஊழியர் களில் 5 விழுக்காடுக்குக் குறையாமல் வேலை வாய்ப்பு கட்டாயமாகத் தரவேண்டும். |
|  உடல் ஊனமுற்ற மக்களின் பிரதிநிதிகள் உள்ளாட்சிகள், சட்டப் பேரவை பாராளுமன்றம் ஆகியவற்றில் இடம்பெற சட்ட திருத்தம் கொண்டுவர வேண்டும்.<br>*(நந்தினி வாய்ஸ் ஃபார் தி டிப்ரைவ்டு, 08.02.2006)* | கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை | உடல் ஊனமுற்றோருக்கான அரசியல் உரிமைகளை வென்றெடுத்திட விடுதலைச் சிறுத்தைகள் உரிய செயல் திட்டங்களை வகுத்துப் | கருத்து சொல்லப்படவில்லை | உள்ளாட்சி அமைப்புகளில் ஊனமுற் றோருக்கு இட ஒதுக்கீடு கொண்டு வர தக்க சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | கருத்து சொல்லப்படவில்லை |
|  ஊனமுற்றோருக்கு வழங்கும் கல்வி உதவித் தொகை உயர்த்தப்படவேண்டும். முற்றிலும் செயலிழந்த ஊனமுற்றோருக்கு மாதம் ரூபாய். 500 உதவித் தொகை வழங்க வேண்டும்.<br>*(நந்தினி வாய்ஸ் ஃபார் தி டிப்ரைவ்டு, 08.02.2006)* | ஊனமுற்றோருக்கு வழங்கப்படும் உதவித் தொகை 200 ரூபாய் என்பது 500 ரூபாயாக உயர்த்தப்படும். | கருத்து சொல்லப்படவில்லை | உடல் ஊனமுற்றோருக்கான கல்வி, உரிமைகளை வென்றெடுத்திட விடுதலைச் சிறுத்தைகள் உரிய செயல்திட்டங்களை வகுத்துப் பாடுபடுவர். | கருத்து சொல்லப்படவில்லை | தமிழகத்தில் பட்டப்படிப்பு முடித்து வேலையின்றி இருக்கும் அனைத்து ஊனமுற்றோருக்கும் மாதம் ரூ. 500 உதவித் தொகை வழங்கப்படும். | 50 விழுக்காடுக்கு அதிகமாக ஊனமுற்றவர்கள் மாதம் ரூ.500/-க்கு குறைவாக வருமானம் உள்ளவர்களாக இருந்தால், அவர்களுக்கு குறைந்தது மாதம் ரூ.300/- நிதியுதவி அளிக்க ஏற்பாடு செய்யப்படும். |

| மக்கள் இயக்கங்களின் கோரிக்கைகள் | தி.மு.க. | அ.தி.மு.க. | விடுதலைச் சிறுத்தைகள் | இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) | பா.ஜ.க. | காங்கிரஸ் |
|---|---|---|---|---|---|---|
| **<u>3. வாழ்வாதாரங்களுக்கான மனித உரிமைகள்</u>**<br><u>3.1 கல்வி :</u> | | | | | | |
| 18 வயது வரை உள்ள அனைத்துக் குழந்தைகளுக்கும் இலவச, கட்டாய, தரமான கல்வி கொடுக்கப்பட வேண்டும்.<br>*(குழந்தை உரிமை கூட்டமைப்புகளின் கூட்டணி - தமிழ்நாடு & பாண்டிச்சேரி, 19.02.2006)* | கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை | அனைவருக்கும் 10 ஆம் வகுப்பு வரையிலாவது கட்டாய இலவச தரமான கல்வி எனும் இலக்கை நோக்கி 'கல்வித்துறை' செயல்பட கட்சி வலியுறுத்தும். | 2010க்குள் 14 வயது நிரம்பிய குழந்தைகள் அனைவரும் ஆரம்ப கல்வி கற்றிட வழி வகை திட்டம் (சர்வ சிக்ஷா அபியான்) முழு முனைப்புடன் செயல்படுத்தப்படும். | ஆரம்ப கல்வி அளிக்கப்படாத சிறுவர் சிறுமியர் எவரும் தமிழகத்தில் இல்லை என்கிற நிலையை உருவாக்கிட காங்கிரஸ் பாடுபடும். |
| மொத்த உற்பத்தியில் 10% கல்விக்காகவும், அதில் 60% அடிப்படை கல்விக்காகவும் ஒதுக்கப்பட வேண்டும்.<br>*(சமகல்வி உரிமைக்கான தமிழக கூட்டமைப்பு, சுனாமி சமநீதி மறுவாழ்வு பிரச்சார இயக்கம், குழந்தை உரிமைகளும், நீங்களும், 2006)* | கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை |
| அருகாமைப் பள்ளிகளைக் கொண்டு இயங்கும் பொதுப்பள்ளிக் கல்வி முறையின் மூலமே கல்விக்கான அடிப்படை உரிமை நிறைவேற்றப்படவேண்டும்.<br>*(கல்விக்கான மக்கள் கூட்டமைப்பு, பிப்ரவரி 2006)* | அனைத்து பள்ளிகளிலும் ஒரே தரமான கல்வி வழங்கிடும் சமச்சீர் கல்வி முறையை தமிழக மக்கள் அனைவருக் கும் வழங்கிட வழியமைப்போம். | கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை |
| மாணவர், ஆசிரியர் எண்ணிக்கை **1:30** என்ற விகிதாச்சாரத்தில் இருக்க வேண்டும்.<br>*(குழந்தை உரிமை கூட்டமைப்புகளின் கூட்டணி - தமிழ்நாடு & பாண்டிச்சேரி, 19.02.2006)* | மேல்நிலைப் பள்ளிகள் மற்றும் ஆரம்பப் பள்ளிகளில் நிரப்பப் படாமல் உள்ள ஆசிரியர் பணியிடங்கள் உடடினயாக நிரப்புவோம். | கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை | **1:40** விகிதாச்சார அடிப்படையில் ஆசிரியர் நியமனத்தை உறுதிப்படுத்த கட்சி வலியுறுத்தும் | கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை |
| பன்னிரெண்டாம் வகுப்பு வரை அனைத்து பள்ளிகளிலும் தமிழ் வழியிலேயே கல்வி கற்பிக்கப்படவேண்டும்.<br>*(கல்விக்கான மக்கள் கூட்டமைப்பு பிப்ரவரி 2006)* | இளம் வயது மாணவ மாணவிகளுக்கு, பள்ளிகளில் தாய்மொழியினைப் பயிற்று மொழியாகப் பயன்படுத்துவதை ஊக்கப் படுத்தும் முயற்சிகளை மேற்கொள்வோம். | கருத்து சொல்லப்படவில்லை | தமிழ் வழிக் கல்வியினை நடைமுறைப் படுத்த விடுதலைச் சிறுத்தைகள் பாடுபடும். | கருத்து சொல்லப்படவில்லை | தாய்மொழி தமிழில் கல்வி அளிக்க தேவையான சட்டத் திருத்தம் கொண்டு வரப்படும். | கருத்து சொல்லப்படவில்லை |

| மக்கள் இயக்கங்களின் கோரிக்கைகள் | தி.மு.க. | அ.தி.மு.க. | விடுதலைச் சிறுத்தைகள் | இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) | பா.ஜ.க. | காங்கிரஸ் |
|---|---|---|---|---|---|---|
| 3.2 நலவாழ்வு : | | | | | | |
|  ஆரோக்கியத்திற்கான நிதி ஒதுக்கீடு அதிகரிக்கப்படவேண்டும். தனியார் மருத்துவ மனைகளில், குறிப்பிட்ட சதவிகிதம் இலவச சிகிச்சை உத்தரவாதப்படுத்தப் படவேண்டும். *(அனைத்திந்திய ஜனநாயக மாதர் சங்கம் - 2006)* | கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை | மருத்துவமனைகள், உபகரணங்கள் ஆகியவற்றிற்கு தேவையான நிதி ஒதுக்கிட கட்சி உறுதியாக பாடுபடும். | கருத்து சொல்லப்படவில்லை | கிராமப்புறங்களில் உள்ள ஏழை மக்களுக்கான மருத்துவ திட்டங் களுக்கு மத்திய அரசு ஒதுக்கியுள்ள ரூ.320 கோடியை தமிழகத்தில் முறையாக பயன்படுத்துவோம். |
|  நலவாழ்விற்கு மாநில அரசு அளித்து வரும் 1.5 சதவிகித நிதி உலக சுகாதார நிறுவனத்தின் அறிவுரைப்படி 5 சதவிகிதமாக உயர்த்தப்படவேண்டும். *(அனைத்திந்திய ஜனநாயக மாதர் சங்கம், 2006)* | கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை |
|  அனைத்து அரசு பொது சுகாதார நிலையங்களுக்கும், போதுமான அடிப்படை வசதிகள், மருந்துகள் மற்றும் போதுமான மருத்துவர்கள் உறுதி செய்யப்படவேண்டும். *[அனைத்திந்திய ஜனநாயக மாதர் சங்கம் - 2006]* | கருத்து சொல்லப்படவில்லை | அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களும் 24 மணி நேரமும் செயல்படும். அதற்காக மூன்று செவிலியர்களும் கூடுதல் பணி யாளர்களும் அமர்த்தப்படுவார்கள். வாடகைக் கட்டடங்களிலுள்ள 2172 துணை சுகாதார நிலையங்களுக்குப் புதிய சொந்தக் கட்டிடங்கள் கட்டித் தரப்படும். | கருத்து சொல்லப்படவில்லை | அரசின் கிராமப்புற சுகாதார அமைப்புகளுக்கு போதுமான வசதிகள் செய்திட பாடுபடுவோம். | ஒவ்வொரு 5000 மக்கட் தொகை கொண்ட பகுதிக்கும் ஆரம்ப சுகாதார மையங்கள் அமைக்கப்படும். தற்பொழுது செயல்பட்டு வருகின்ற ஆரம்ப சுகாதார மையங்கள் மருத்துவமனைகளாக மாற்றப்படும். | எல்லா மருத்துவமனைகளிலும் இடைவெளியில்லாமல் தேவையான மருத்துவர்களை நியமிப்பது. தேவையான எல்லா மருந்துகளும் உரிய நேரத்தில் கிடைக்க ஆவன செய்வது. நவீன மருத்துவ சிகிச்சைகள் கிராமப் புறத்தில் வாழ்கின்ற ஏழை எளிய மக்களுக்கும் கிடைக்கும் வகையில் அரசு மருத்துவ சேவையை விரிவுப்படுத்த தேவையான நடவடிக்கைகளை காங்கிரஸ் மேற்கொள்ளும். |

| மக்கள் இயக்கங்களின் கோரிக்கைகள் | தி.மு.க. | அ.தி.மு.க. | விடுதலைச் சிறுத்தைகள் | இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) | பா.ஜ.க. | காங்கிரஸ் |
|---|---|---|---|---|---|---|
| **3.3 பொதுவள ஆதாரங்கள்**<br>• பொதுவள ஆதாரங்கள் (Common Property Resources - CPR) கிராமப்புற பொது ஆதாரங்கள் (Common Village Resources) தனியார் மயமாக்கப்படுவது மனித உரிமை மீறலாக பாவிக்கப்பட்டு பாதுகாக்கப்படவும், மீட்கப்படவுமான முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.<br>*(சம கல்வி உரிமைக்கான தமிழக கூட்டமைப்பு, சுனாமி சமநீதி மறுவாழ்வு பிரச்சார இயக்கம், குழந்தை உரிமைகளும், நிங்களும் - 2006)* | கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை |
| <u>3.3.1 உணவு உத்திரவாதம் :</u><br>• விவசாயத்தை உலக வர்த்தகத்தில் சேர்த்து வெளிநாட்டு உணவு தானியங்களை மூலதன இறக்குமதிக்கு வழி செய்வதன் மூலம் நமது விவசாயத்தை முற்றிலும் அழிவுப்பாதைக்கு இட்டுச் செல்லும் போக்கு மாறவேண்டும்.<br>*(அமைப்பு சாரா தொழிலாளர்கள் கூட்டமைப்பு - 2006)* | கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை | தாராளமயமாதல், தனியார் மயமாதல் மற்றும் உலகமயமாதல் என்னும் வணிகப் பொருளாதாரக் கொள்கையின் மேலாதிக் கத்தால் மரபு சார்ந்த விவசாயத்தொழில் நலிவடைகிறது. இத்தகைய போக்கினை முறியடித்து மக்களுக்கான உற்பத்தி முறைகளை, மீட்டெடுக்கும். | கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை |
| • பொதுவிநியோகத் திட்டத்தின் மூலம் அனைவருக்கும் உணவு உறுதி செய்யப்பட்டு இத்திட்டத்தின் மூலம் வழங்கப்படும் அத்தியாவசிய பொருட்களின் விலை குறைக்கப்படவேண்டும்.<br>*(அமைப்பு சாரா தொழிலாளர்கள் கூட்டமைப்பு - 2006)* | பொது விநியோகத் திட்டத்தின் மூலம் ஒரு கிலோ அரிசி ரூ. 2/-க்கு வழங்கப்படும். | பொது விநியோகத்திட்டத்தின் மூலம் மாதம் 10 கிலோ அரிசி இலவசமாக வழங்கப்படும். | கருத்து சொல்லப்படவில்லை | அத்தியாவசிய பொருட்கள் தேவைப்படுவோர் அனைவருக்கும் நியாய விலையில் வழங்கப்படும் வகையில், பொது விநியோகத் துறையை வலுப்படுத்த கட்சி பாடுபடும். | குறைந்தபட்சம் 2000 மக்கள் தொகை உள்ள ஒவ்வொரு கிராமத்திலும் நியாய விலைக் கடைகள் அமைக்கப்படும். மாதம் முழுவதும் அனைத்து பொருட்களும் கிடைத்திடவும் ஆவன செய்யப்படும். | சீர்கேடுகளைக் களைந்து, உணவுப் பொருள் விநியோகத்தை சீர்செய்ய உடனடியாக நடவடிக்கைகள் எடுக்க காங்கிரஸ் கட்சி உறுதி அளிக்கிறது. |

| மக்கள் இயக்கங்களின் கோரிக்கைகள் | தி.மு.க. | அ.தி.மு.க. | விடுதலைச் சிறுத்தைகள் | இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) | பா.ஜ.க. | காங்கிரஸ் |
|---|---|---|---|---|---|---|
| தரிசு நில விவசாயிகளின் வாழ்வாதார உரிமைகளை பாதுகாக்கும் வகையில் விவசாய உற்பத்தி முறைகள் அமலாக்கப்படவேண்டும். *(தமிழ்நாடு சுற்றுச் சூழல் கழகம் - 2006)* | புன்செய் நிலங்களையும் தரிசு நிலங்களையும் முறையான விளைச்சல் நிலங்களாக மாற்றிட நுண்ணிய நீர்ப்பிரி முகடு மேலாண்மை **(Micro Watershed Management)** போன்ற புதிய தொழில் நுட்பங்களைக் கையாள் வதற்கு வழிவகை காண்போம். | தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் அமைக்கப்படும் ஆழ்துளைக் கிணறுகளுக்கு, மின் இணைப்பு, முன்னுரிமை அடிப்படையில் வழங்கப்படும். | கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை |
| நிலச்சீர்திருத்த சட்டங்கள் கொண்டுவரப்பட்டு, அமலாக்கப்பட்டு உபரி நிலங்கள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். *(தமிழ்நாடு சுற்றுச் சூழல் கழகம் - 2006)* | நிலமற்ற ஏழை எளிய குடும்பங்களுக்கு தலா இரண்டு ஏக்கர் நிலம். | கருத்து சொல்லப்படவில்லை | புதிய நிலப்பகிர்வு சட்டத்தைக் கொண்டுவர விடுதலைச் சிறுத்தைகள் பாடுபடும். | நிலச்சீர்திருத்த சட்டத்தை திறம்பட செயல்படுத்தி மிச்ச நிலங்களை எடுத்து, நிலமற்ற கூலி விவசாயிகளுக்கு நிலம் அளிக்க வேண்டும். | கருத்து சொல்லப்படவில்லை | நிலச்சீர்திருத்தம் மூலம் கிடைத்த உபரி நிலங்களை பகிர்ந்து வழங்கி உற்பத்தி செய்யத் தேவையான நிதி உதவி வழங்குவோம். |

| மக்கள் இயக்கங்களின் கோரிக்கைகள் | தி.மு.க. | அ.தி.மு.க. | விடுதலைச் சிறுத்தைகள் | இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) | பா.ஜ.க. | காங்கிரஸ் |
|---|---|---|---|---|---|---|
| 3.3.2 நீர்வளம் :<br>நீர்வளத்திற்கு ஆதாரமான, தமிழகம் முழுவதும் உள்ள நதிகள், குளங்கள், கண்மாய்கள் மற்றும் அவற்றின் இணைப்புக்கால்வாய்கள் தூர்வாரப்படவேண்டும்.<br>*(தமிழ்நாடு சுற்றுச்சூழல் கழகம் - 2006)* | சென்னைப் புறநகர் பகுதிகளில் இயற்கையாக அமைந்துள்ள ஏரிப் பகுதிகளைச் சீரமைத்தல் புதிய குடிநீர் திட்டங்களை உருவாக்க செயல் திட்டங்களை வகுப்போம். | கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை | தற்போதுள்ள பாசன வசதிகள் மேம்படுத்தப்பட ஆறுகள், வாய்க்கால்கள், கண்மாய்கள், குளங்கள், ஏரிகள் ஆகியவற்றை தூர்வாரி ஆழப் படுத்துவதுடன் கரைகளையும் வலுப் படுத்துவோம். | கண்மாய்கள் மற்றும் கால்வாய்களை தூர் வாரி மழை காலத்தில் மழை நீரை சேமிப்போம். இப்பணிக்காக 1000 நீர் நிலப்பணியாளர்கள் நியமிக்கப்பட்டு வருடம் முழுவதும் இப்பணி மேற்கொள்ளப்படும். | ஏரிகள், நீர் நிலைகளை குறிப்பிட்ட கால அளவுக்குள் தூர் எடுத்து கரையை உயர்த்தி, நீர் நிலைகளை காப்பாற்றுவது.<br>நீர் பற்றாக்குறையை தீர்க்க தென்னக நதிகளை இணைக்கும் திட்டத்தை நிறைவு செய்ய ஆவன செய்வது. |
| நதிகளின் நீர்பிடிபகுதிகளில் நடைபெற்றுவரும் வன அழிப்புக்கும் நதிகளின் படுகைகளில் நடைபெற்றுவரும் மணற் கொள்ளைக்கும் அதனால் ஏற்படும் நீர் நிலைகளின் அழிவிற்கும், முடிவு கட்டப்படவேண்டும்.<br>*(தமிழ்நாடு சுற்றுச்சூழல் கழகம் - 2006)* | ஆற்று நீர்ப்படுகைகள், ஏரிகள் ஆகியவற்றில் இருந்து வரைமுறையின்றி மணல் எடுப்பதை கட்டுப்படுத்துவோம் | கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை | பெருகி வரும் மணல் கொள்ளையை தடுத்து நிறுத்தவும் கட்சி பாடுபடும். | கருத்து சொல்லப்படவில்லை | ஆற்று மணல், கனிமவளம், வனவளம் போன்ற இயற்கைச் செல்வங்களைப் பெரும் பணக்காரர்கள் மற்றும் பன்னா ட்டு தொழில் குழுமங்கள் கொள்ளை அடிப்பதற்கு அனுமதிக்காது. |
| புதிய வணிக ஆலைகள் அமைக்கப்படும்போது நீர்நிலைகள் ஆக்கிரமிக்கப்படுவதும், மூடப்படுவதும் தடை செய்யப்படவேண்டும். மேலும், அந்த ஆலைகளில் நீர்நிலைகள் மாசுபடுவதை தடுக்க வேண்டும்.<br>*(தமிழ்நாடு சுற்றுச்சூழல் கழகம் - 2006)* | கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை | கருத்து சொல்லப்படவில்லை | குளங்கள், ஏரிகள், கால்வாய்கள், கண்மாய்கள் ஆகிவைகளில் உள்ள ஆக்கிரமிப்புகள் முழுமையாக அகற்றப்படும். | கருத்து சொல்லப்படவில்லை |
| நிலத்தடி நீரை அதிகப்படுத்த, நீர் சேகரிப்பு முறைகள், குறிப்பாக மழைநீர் சேகரிப்பு முறைகள் மக்களிடையே பரவலாக்கப்படவேண்டும்.<br>*(தமிழ்நாடு சுற்றுச்சூழல் கழகம் - 2006)* | கருத்து சொல்லப்படவில்லை | மழைநீர் சேகரிப்புத் திட்டம் வாய்ப்புள்ள இடங்களில் எல்லாம் விரிவுபடுத்தப்படும். | கருத்து சொல்லப்படவில்லை | தண்ணீர் கொஞ்சமும் விரயமாகாமல் பயன்படக்கூடிய வகையில் நீண்ட கால சேமிப்பு - பாசன திட்டங்கள் வகுக்கப்படவும் கட்சிப் பாடுபடும். | மழை நீர் வீணாகாமல், சிறிய நீர்ப்பாசன திட்டங்கள் மூலம் மழைநீர் சேமிக்கப்படும். | மழைக்காலங்களில் நதிநீர் கடலில் கலந்து வீணாவதை தடுக்க எல்லா பெரிய ஆறுகளின் குறுக்கேயும், குறைந்தது ஒவ்வொரு 25 கிலோமீட்டர் நீளத்திற்கும் ஒரு திறந்து மூடும் கதவுகள் வசதியுடன் ஆற்றின் குறுக்கே ஒரு தடுப்பு அணை கட்டப்படும். |

உரிமைகளை முன்னிருத்தி, அடித்தள மாற்றங்களுக்காகக் குரலெழுப்பும்

**இம்மக்கள் அறிக்கைகளுக்கும்,**

ஆட்சியைப் பிடிக்கும் நோக்கோடு சலுகைகளை அள்ளித்தெளிக்கும்

**கட்சி அறிக்கைகளுக்கும்,**

என்ன தொடர்பு ?

அட்டை கார்ட்டூன் : (நன்றி) தினமணி, சமூக செயல்பாட்டு இயக்கம்.



சமூக கண்காணிப்பகம் - தமிழ்நாடு, சமூக மேம்பாட்டுக்கான தமிழக மக்கள் அமைப்பின் 10 ஆண்டு (1995 - 2005) அனுபவங்களின் அடிப்படையில் உருவாக்கப்பட்டுள்ள ஒரு தகவல் கருவூலம்.

சமூக மேம்பாட்டுக்கான தமிழக மக்கள் அமைப்பு, சென்ற பல ஆண்டுகளாக தமிழ்நாடளவில், அரசு வரவு-செலவுத் திட்டங்கள்பற்றிய ஆய்வுகள், தமிழகத்தின் ஒடுக்கப்பட்ட குழுவினரான தலித் மக்கள், பழங்குடியினர், பெண்கள், குழந்தைகள், சிறு மீனவர், மற்றும் அனைத்து அமைப்புசாராத் தொழிலாளர்கள், போன்றவரின் சமூக மேம்பாட்டுத்தளத்திலே தமிழக அரசின் கொள்கைகளையும், திட்டங்களையும் கண்காணித்தல், தமிழ்நாடு சமூக மேம்பாட்டு அறிக்கை தயாரித்தல், போன்ற பல்வேறு பணிகள் வழியாக, தமிழகத்திலே தன் முத்திரையைப் பதிவு செய்துள்ளது.

இத்தகு பணிகள் மேலும் சீரிய முறையில் முன்னேற உதவும் வகையிலே மாநில அளவிலே வலுவான ஒரு தகவல் கருவூலமாக சமூக கண்காணிப்பகம் - தமிழ்நாடு 2004-ம் ஆண்டுத்துவக்கத்தில் உருவாக்கப்பட்டுள்ளது. தமிழகத்திலே ஒடுக்கப்பட்டவர்களின் வாழ்வுரிமைக் கண்ணோட்டத்திலே அரசின் கொள்ளைகளையும் திட்டங்களையும், நிதி ஒதுக்கீடுகளையும் கண்காணிப்பதே சமூக கண்காணிப்பகம் - தமிழ்நாட்டின் மையப்பணியாக அமையும்.

இயக்குநர், சமூக கண்காணிப்பகம் - தமிழ்நாடு
202, சித்ரா அவென்யூ (ஷாப்பிங் காம்ப்ளக்ஸ்), 9, சூளைமேடு நெடுஞ்சாலை,
சென்னை - 600 094. தொலைபேசி : 91-44-2374 6044 தொலைநகல் : 2374 6107
மின் அஞ்சல் : manu50@vsnl.com